இல்லறஜோதி
MPS

கலைமன்ற வெளியீடுகள் !

ஊடுருவி எழுதியவை

வால்டையர்	[இங்கர்சால்]	...	1	0
சீர்திருத்தம்	,,	...	1	0
மதங்கள்	,,	...	1	0
மூட நம்பிக்கை	,,	...	1	0
அறியாமை	,,	...	1	0
உண்மை	,,	...	1	0
கோயில்கள்	,,	...	1	0
கடவுள்	,,	...	1	0
மக்கள் உரிமை	,,	...	1	0
அரசாங்கம்	[லெனின்]	...	1	0
தொழிலாளர்	[மாஜினி]	...	1	0
கலிங்கப் போர்		...	1	0
ரோமியோ-ஜூலியத்		...	1	0
லைலா-மஜ்னு		...	1	0
வீரமங்கை ஜோன்		...	1	0
நெப்போலியன்		...	1	0
நானா	[எமிலிஜோலா]	...	1	0
உலகைத் திருத்திய உத்தமர்கள்		...	1	0
ஒளி விளக்குகள்		...	1	0
மாஜி கடவுள்கள்		...	1	0
சீனத்துச் சிங்கம்		...	1	0
ரஸ்புடீன்		...	0	8

கோவி. மணிசேகரன்

ஜூலியஸ் - ஸீஸர்	...	1	0
புரட்சி புலவன் அம்பிகாபதி	...	1	0

கலைமன்றம்—சென்னை-1.

கதைச் சுருக்கம்

புகழேணியின் உச்சியிலே ஏறிவிட்ட கவிஞர்களையும் இடைவிடாது பாராட்டும் இந்த உலகம். மனோகரனை மட்டும் கலைஞன் என கருதவில்லை. அவனைப் பைத்தியம் என்று முடிவு கட்டி, சிகிச்சை வேறு தொடங்கிவிட்டார் அவன் தந்தை, வட்டிக் கடை குமாஸ்தா நெட்டிலிங்கம்.

மனோகரைப் பெற்றதாய் அனந்தா, தன் மகனுக்குக் கண்ட மருந்து திருமணம், ஆம், கலைக் கன்னியைக் கண்டு மகிழ எண்ணிய கவிதா மன்னன், கலையறிவில்லாத காரிகை காவேரியைக் கைபிடிக்க நேர்ந்தது. கலை, கவிதை, கானம், இயற்கை விநோதம் இவற்றையே உருவாகியவள் சித்ரா புரொபஸர் சந்திர சூடாமணியின் ஏக புதல்வி; அந்தக் கன்னி புனைந்த கவிதை, பாதியோடு நின்றது முடிவடையாமலே! சித்ராவின் முற்றுப்பெறாத கவிதைக்குப் பொருத்தமாக அமைந்து அழகூட்டியது, மனோகரின் கவிதை, களிப்புப் பொங்கிய அவள் உள்ளம், கவிஞனைக் கண்டு பிடித்து விட்டது.

சித்ரா, இப்போது தன் உள்ளத்தை கவிதா மன்னன் மனோகரன் இதயத்திலே ஆடவிட்டாள். சித்ராவால் ஏற்றம் பெற்றான் மனோகரன். பங்களாவும் பணக்கார வாழ்வும் அவனைத் தேடி வந்தன. அவற்றைக் கண்டு பூரித்துப்போயினர் அவன் பெற்றோர். ஆனால்......மனோகரின் மனைவி கண்கலங்கினாள். அவளுக்கு வேண்டியது ஒன்றே ஒன்றுதான் அதுதான் அவன் கணவன்; இளவயது முதல் தன் இதயத்திலேஇடம்பெற்றுவிட்ட சித்ரா தன்னைப்பிரிந்து மனோகரை நோக்கிப்போய்க் கொண்டிருப்பதைக் கண்டு பொறுமினான் மோகன்!

சித்ராவிடம் நயமாகப் பேசி அவள் போக்கைத் திருத்தப் பார்த்தும், தோல்வி கண்டான் மோகன். கணவனிடம் கண்ணீர் விட்டு தான் பெற்ற பைந்தமிழ் செல்வத்தை அவன் பாதத்தில் வைத்துக் கதறினாள் காவேரி, கலையைக் கற்றுக் கொண்டுகளிப்பூட்டுவதாகச் சொன்னாள். அவள் சொன்னது எதுவுமே ஏற்கவில்லை அவன் செவிகள். தன் கணவனைத் தனக்கே தந்துவிட வேண்டுமென்று தாலியைக் காட்டிக் கெஞ்சுகிறாள். சித்ரா வேதனை விம்மலுடன் தான் இனி மனோகரை சந்திப்பதில்லை என்று உறுதி கூறுகிறாள்.

சித்ராவைக் காணவந்த மனோகர் "சித்ரா தன்னைப்பார்க்க விரும்பவில்லை" என்று சொல்லக்கேட்டு மனம் வெதும்புகிறான். சித்ரா மோகனை மணப்பதாக ஒப்புக்கொண்டு விடுகிறாள். மனோகரன் இதே நினைவில் போகும்போது கார் ஒன்று மோதிக் காயப்படுகிறான். அதுமுதல் "சித்ரா சித்ரா" என்றே பிதற்றுகிறான். சித்ராவை அழைத்து வரச்சொல்லுகிறார் டாக்டர். இல்லறஜோதியான காவேரி, தன்கணவனை ஏற்றுக்கொண்டு அவர் உயிரை மீட்க வேண்டுகிறாள். சீறி எழுந்தசித்ரா, வேதனையோடு "வரமுடியாது" என்கிறாள்.

குழப்பத்தில் சித்ரா திருமணத்தை நிறுத்தச் சொல்கிறாள் தந்தையிடம். இதற்கெல்லாம் காரணம் மனோகர்தான் என்று மோகன் சுட்டிக்காட்ட புரொபஸர் வெகுண்டெழுந்து செல்கிறார் மனோகரிடம். புரோபஸர் மனோகரைக் கண்டித்தாரா?........ இல்லறஜோதி காவேரி தன் கணவனின் அன்பைப் பெற்றாளா?

மிகுதியைத் திரையில் காண்க

★

ஆசைத்தம்பியின் அழகு நூல்கள்

கசந்த கரும்பு	...	1	8
தனி அரசு ஏன்?	...	1	0
சிலந்திக்கூடு	...	1	0
முள்	...	1	0
மனைவி	...	0	12
இருண்ட வாழ்வு [நாவல்]	...	0	12
வாழ்க்கை வாழ்வதற்கே	...	0	12
கொலைகாரி	...	0	12
அவள் வாழ்வு	...	0	8

கலைமன்றம் — சென்னை-1

இல்லறஜோதி பாடல்கள்

கல்யாண நடனம்

கல்யாண வைபோக நாளே!—வேல்
கண்ணோடு பேசும் கண்ணாலே! (கல்)

கஜல்

தாலி கழுத்தில் அணிந்தாய்
சம்சாரம் ஆகி விட்டாய்!
புதுவாழ்விலே பொன்னான நாளிதே!
மென் மலரே மணம் வீசு!
சிவந்த ரோஜா சிரிப்ப தேனோ!—(அட)
காண்பாயே சுகம் தேன் போலே! (கல்)

கஜல்

மாலையில் தென்றல் வந்தாலே
மயக்கமுமே கூட வரும்!
சோலை அழகே! உன்னை மணந்தார்
சொல்லுவார் கவிதைகள் யாவும்!
இதற்குமேல் வேறு கதை உலகிலுண்டோ
காண்பாயே சுகம் தேன்போலே (கல்)

கஜல்

காதலெனும் புத்தகத்தில்
காகிதமே நீ யாவாய்
காவிரி நதியருகே
காவியமாய் அவரிருப்பார்
உலகத்தில் பெருங்கதையே இது தானம்மா
காண்பாயே சுகம் தேன்போலே (கல்)

சித்ரா பாட்டு

தோகையறு

அன்னம் போலும் மறவர் மங்கை எனையே
தேடி வந்தும் நிற்ப தேனோ—அங்கே!
பார் பார் பார்
இந்த பறவையைப் பார்,
பக்கம் வந்து மெள்ள மெள்ள பறப்பதைப் பார்! (பார் - பார்)

நடனங்கள் புரிவேன் நல்லிசை பாடுவேன்
நல்லநல்ல கீதங்கள் செய்து தருவேன்
பலநாள் பழகிய பறவையைப் போல
பக்கம் வந்து மெள்ளமெள்ள பறப்பதைப் பார் (பார் - பார்)

தென்னவன் மகள் நான் செந்தமிழ் பேசுவேன்
சின்னவிழிக் காவிய கன்னி என்னைப்பார்
பலநாள் பழகிய பறவையைப் போல
பக்கம்வந்து மெள்ள மெள்ள பறப்பதைப்பார் (பார் - பார்)

காவிரி நதியின் கரைதனில் ஆடலாம்
காடுமலை யாவையும் கண்டு வரலாம்
பலநாள் பழகிய பறவையைப் போல
பக்கம் வந்து மெள்ள மெள்ள பறப்பதைப் பார் (பார் - பார்)

காவேரி கோரஸ்

சிட்டுப்போலே வானகம் எட்டிப் பறந்தே
வைர வெட்டுப் போலே ஜோதி கொட்டி மகிழ்வேன்! (சிட்டு)

ஆ!... கலை பாவாணன் உள்ளம் என்னும்
ராஜாங்கம் தன்னை என்றும்
ஆட்சி செய்குவேன்
நான் காவியச் சோலையின் ராணி
வாடாமல் மின்னும் வண்ணப் பாமாலைபோலே
நெஞ்சம் என்னும் தங்கத்தட்டில் வாழ்வேனே நானே
(சிட்டு)

மொழி பேசாத கிள்ளை என்றும்
வீசாத தென்றல் என்றும்
பேசி மகிழ்வார்!
நான் காண்பது இல்லற ஜோதி!
வாடாமல் மின்னும் வண்ணப் பாமாலை போலே
நெஞ்சம் என்னும் தங்கத்தட்டில் வாழ்வேனே நானே (சிட்டு

சித்ரா பாட்டு

பெண்ணில்லாத ஊரிலே
பிறந்து வந்தாற் போலவே.
வண்ணம் பாடும் வெண்ணிலா
வாராய் சேதி கூறுவேன்
பருவம்என்னும் காற்றிலே

K. Arumugam

பறக்கும் ஞாலத் தேரிலே
கவிஞர் வந்தார் தோழியே
காண நீயும் ஓடிவா !
தமிழில் பாடும் நாவிலே
தமிழைத் தீட்டும் கையிலே
அமுதம் கண்டேன் தோழியே
அருந்த நீயும் ஓடிவா

அனர்கலி—சலீம் பாட்டு

அனர் : களங்கமிலா காதலிலே
காண்போம் இயற்கையெலாம் (களங்க)
லலாலலா லலலா — காதலிலே
சலீம் : நினைவிலே பேதமில்லை
பிரிவென்றால் வாழ்வுமில்லை
அனர் : இனி என்றும் பிரிவில்லையே—காதலிலே
பிரிந்திடில் உயிரில்லையே — காதலிலே (களங்க)
அனர் : இருவரே காணும் மின்பம்
உலகிலே காதல் ஒன்றே
சலீம் : இனி என்றும் பிரிவில்லை
பிரிந்திடில் உயிரில்லையே -- காதலிலே (களங்க

சித்ரா பாட்டு

கேட்பதெல்லாம் காதல் கீதங்களே
காண்பதெல்லாம் வாழ்க்கை வேதங்களே (கேட்ப)

கலை வாணர்கள் பொழியும் கவிதையிலே
கனிவான தீந்தமிழ் ஓசையிலே
கடல் வீசும் அலைபோலும் மனமே ஆடுதே
அன்பு நாடும் உயிர்கள் யாவும் ஆசையில்
நின்று பாடுதே அழிவிலா ஞால முழுதும் (கேட்ப)

தேன் மலரில் ஆடும் எழில் தனிலே
திறமை காணும் கவிஞர்கள் உலகில் (கேட்ப)

எல்லை இலாத இன்பம் — திசை
எல்லாம் நிறைந்து கொஞ்சும்
இனிய மொழியில் (கேட்ப)

வாலிபம் எனும் பருவம் இவர்களின் மனதில்
மகிழ்வு தந்து கலையுடன் புதுமையில் இணைந்து (கேட்ப)
காவியம் நிறை சுகமே கவிஞரின் ஜெகமே
கனிவு கூறும் பாடும் இன்ப சுவை
மகா மனிதரிவர் தருவதான
தமிழமுதே இனிமை தருமே
இவர்கள் மொழியில் (கேட்ப)
தென்றல் வராத வனமே—இள
மங்கை இல்லாத இடமே
இவர் மனதிலென்றும் இடம் பெறுவதில்லை
கலையே இவர்கள் நிலையே
மானிரு விழி நகை மாதரே
மனமகிழப் பாடும் இவர் பாதையே
மதியிலார் அறிவு பெறும் சங்கீதமே
தருவார் செவி குளிரவே!
காணவும் தரும் சுகமே
இளமையின் கனவே
இவர்கள் பொழியும் சுவையமுதே
கண்டால் அருகில் வந்தால்
அமுதுகொண்டால் கவலை அகன்றிடுமே
கனவிலும் நினைவிலும் இவர் வருவார்
கலைமலர் பலபல இவர் தருவார்
மகிழ்வுடனே நடமிடுவேன்!
இவர்முனமே ஸ்வரமுடனே (கேட்ப)

(குழந்தை) பிறந்தநாள் பாட்டு

சிறுவிழி குறுநகை சுவைதரும் மழலையின்
சொல்லே இசைதரும் வீணையே—எழில்
சிலைநிகர் வடிவே தேனலைக் கடலே
எண்ண எண்ண இன்பந்தரும் வண்ண மலரமுதே (சிறுவிழி)
நீ ஆடிடும் போதென் இதயமும் சேர்ந்தே
நில்லாமலே மகிழ்ந்தாடுமே
வேதனை நினைவுகள் உன்முகம் கண்டால்
சொல்லாமலே பறந்தோடுமே
இதுவே பொன்னான திருநாளே
வேறிலையே என் வாழ்விலே

மணியே தளிரே சிங்காரச் சேயே
மாருத செல்வம் நீயே (சிறுவிழி)
நாடகம் போன்ற நயமிகக் காண்பேன்!
நீ கைவீசியே வரும் போதிலே
வானகம் தவழ்ந்திடும் தென்றலைக் காண்பேன்
என் ஜீவனே உன் மீதிலே
இதுவே பொன்னான திருநாளே
வேறில்லையே என் வாழ்விலே
மணியே தளிரே சிங்காரச் சேயே
மாருத செல்வம் நீயே (சிறுவிழி)

காவேரி சோகப் பாட்டு

கண்கள் இரண்டில் ஒன்று போனால்
காணமுடியாதே! நல் அழகை காணமுடியாதே (கண்கள்)
ஆக்கம் ஏதினி சுந்தர விழியே
துன்பங்கள் உறங்குவதில்லையே
இரவு மங்கை இசைக்கும் கீதம்
ஒருவர்க் காகாதே- நல்விழிகள்—உறக்கம் காணாதே (கண்கள்)
ஆசையே சுமைதான் என்றுமே
ஆனால் உலகினை ஆசை நீங்குமோ!
மேகம் மூடுவதாலே வானம்
மறைந்து போவதும் இல்லையே—வாழ்வும் இதுதானா
இல்லற ஜோதி அணைந்து போனால்
இருளில் வழியறியாதே! (கண்கள்)

காவேரி கனவுப் பாட்டு

காவேரி : ஆஹா......

மனோஹர் : ஓஹோ......

காவே : கலை தேனூறும் கன்னித்தமிழ் பேசுவேன்
ஆடுவேன் பாடுவேன்
எந்தன் ஆசை ராஜனருகே

மனோ : சிற்பி செய்யாத தங்கச்சிலை அன்னமே
ஓடிவா......உன்னைத்தேடும் தேவனருகே!

காவே : காலமும் ஞாலமும் ஜோடி சேர்ந்தே
ஓடுதே வேகமாய்......

மனோ: ஜீவனும் மேனியும் ஒன்றாகச் சேர்ந்தால்
ஓடுதே வேகமாய்...

காவே: ஓ ராஜா
வாடிடும் ஜீவனைப் பாராய் வாராய் ராஜா
தெய்வம் இல்லாத ஆலயம் போலே (ஓராஜா)
பாழாகவோ ராஜா...ஓராஜா

சித்ரா பாட்டு

உனக்கும் எனக்கும் உறவு காட்டி
உலகம் சொன்னது கதையா?
நினைத்து நினைத்து மகிழும் விதத்தில்
நேசம் கொண்டது கனவா? (உனக்)
இனிக்க இனிக்க கவிதை பேசி
இருந்த தெல்லாம் கதையா
எடுக்க எடுக்க குறைவில்லாமல்
வளர்ந்த தெல்லாம் கனவா? (உனக்)
சிரித்து சிரித்து மலர்ந்த முகத்தை
சிவக்க வைத்ததும் கதையா?
வடித்து வடித்துக் கொடுத்தயாவும்
வாய் புகன்றதும் கனவா? (உனக்)

அண்ணாவின் அரிய நூல்கள்

VERDICT ON VERDICT	...	1	0
வெற்றி முரசு	...	1	0
மகா கவி பாரதியார்	...	0	8
தீ பரவட்டும்	...	1	0
தேன் துளிகள்	...	1	0
புராண மதங்கள்	...	1	0
மறு மலர்ச்சி	...	1	0
குமாஸ்தாவின் பெண்	...	1	0
தேவ லீலைகள்	...	0	8
நமது முழக்கம்	...	0	8
அண்ணாவின் உவமைகள்	...	0	8

கலைமன்றம் — சென்னை-1

உங்கள் நண்பர்களுக்குத்

திருமணமா?

இதோ,

பரிசுக்கேற்ற புத்தகம்!

பெண்ணின் பெருமை, கற்பின்
உயர்வு அத்தனையும் சித்தரிக்கும்
ஓர் அற்புத நாவல்!

★ நல்ல பெண்மணி ★

எழுதியவர்: கவிஞர். சுப்பு-ஆறுமுகம்

அழகிய மூவர்ண முகப்பு

விலை ரூ. 2—4—0

கலைமன்றம்

த. பெ. எண். 275. :: சென்னை-1.

— நடிகர்கள் —

சிவாஜி கணேசன்	...	மனோஹர்
தங்கவேலு	...	நெட்டிலிங்கம்
அசோகன்	...	மோஹன்
பெருமாள்	...	புரொபசர்
கிருஷ்ணன்	...	மங்கு
திருப்பதிசாமி	...	சாவதானப்பிள்ளை
கொட்டாப்புளி ஜெயராமன்	...	கதை பார்ப்பவர்
சௌந்தர்	...	ராஜாமான் சிங்
ராமராவ்	...	அமீனா
சேதுபதி	...	யூனானி டாக்டர்
கிட்டான்	...	பதிப்பக முதலாளி

— நடிகைகள் —

பத்மினி	...	சித்ரலேகா
ஸ்ரீரஞ்சனி	...	காவேரி
சரஸ்வதி	...	அனந்தா
கமலம்	...	லக்ஷ்மி

நடன அமைப்பு :— சோப்ரா, மாதவன்

நடனம்:— சந்த்ரா, கமலா

இசை அமைப்பு:— ஜீ. ராமநாதன்

பின்னணி இசை :

பி. லீலா, ஜிக்கி, ஸ்வர்ணலதா, காந்தா,

கஜலக்ஷ்மி, ஆண்டாள், ஏ. எம். ராஜா

இசைக்குழு: ராமநாதன் பார்ட்டி

கதை, வசனம், பாட்டு:— **கண்ணதாசன்**

டைரக்ஷன் : **ஜி. ஆர். ராவ்**

மேற்பார்வை : **டி. ஆர். சுந்தரம்**

தயாரிப்பு: **மாடர்ன் தியேட்டர்ஸ்**